2016 பிப்ரவரி 20] [திரு. கே.ஏ. ஜெயபால்]

"2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

8. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2015-2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு புது நம்பிக்கையூட்டி, இளைய தலைமுறைக்கு புத்தெழுச்சி தந்து, புதுமைகளைச் செயலாக்கி, தமிழகத்தை என்றும் புதியதாய் படைக்கும் வெற்றித் திருமகள்; வாக்களித்த மக்களின் நம்பிக்கையை ஈடேற்றி, நிருவாகத்தைச் சீர்படுத்தி, நேர்படுத்தி, திறம்படவே மேம்படுத்தி, உரிமைக் குரல் எழுப்பி, உற்சாகப் பணியாற்றி, ஆக்கபூர்வமான*

சிந்தனையால், அறிவார்ந்த செயல்களால், முன்னோடித் திட்டங்களால், தமிழையும், தமிழ்நாட்டையும் கட்டிக் காத்து, மேம்படுத்தி, தமிழர் வாழ்வு நலம் பெறவே, தன் வாழ்வையே அர்ப்பணித்து வாழ்ந்து வரும் தன்னிகரில்லாத் தனிப் பெருந்தலைவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, 2015-2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்.

துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை @ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின்முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் 10,605.30 கோடி ரூபாய் நிதியை ஒதுக்குவதற்கு வழிவகை செய்கின்றன. இவற்றில் 8,088.89 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 2,516.41 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று, 2015-2016 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் “புதுப் பணிகள்” மற்றும் “புது துணைப் பணிகள்” குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை, அந்நிதிக்கு ஈடு செய்வதும் இத்துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

2015 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 3,039.24 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் “மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10,000 குடிசைவாழ் குடும்பங்களை மறுகுடியமர்த்தவும், அதற்கான வசதிகள் மற்றும் உதவிப் படிகள் வழங்கவும், தமிழ்நாடு குடிசை மாற்று

@ 339 முதல் 344 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

வாரியத்திற்குச் சிறப்பு மானியமாக 107 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-30

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பெறும் ஊரக மற்றும் நகர்ப்புற நியாய விலைக் கடைகளுக்கு 2010-2011 முதல் 2013-2014 வரையிலான காலத்தில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்வதற்காக அரசு கூடுதலாக 102.93 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 60.14 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 12-கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

2011-2012 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட 552 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 616.31 கோடி ரூபாய் கூடுதல் செலவில் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 43-பள்ளிக் கல்வித் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் பங்குத் தொகை பெறப்படுவதை எதிர்நோக்கி, மாநில அரசின் இணை பங்குத் தொகையுடன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 500 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 34-நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 229.46 கோடி ரூபாய் செலவில், புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு

நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரையிலான 20 கி.மீ. நீளத்திற்கு நான்கு வழிச் சாலையை ஆறு வழிச் சாலையாக மேம்படுத்துவதற்கும், படப்பை புறவழிச் சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்கும் 189.81 கோடி ரூபாய்க்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

ஒன்பது கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், ஒரு பொதுத் துறை சர்க்கரை ஆலைக்கும் கரும்புக்குரிய நிலுவைத் தொகையை வழங்குவதற்குக் கடனாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 83.98 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/- "மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் சேமிப்பிலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015-2016 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன்.

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

	கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	3	—	1,05,56
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	14,39	—	—
3	நீதி நிருவாகம்	14,45,18	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	664,62,92	4	1,19,69
5	வேளாண்மைத் துறை	78,90,41	16,47,79	6,40,12
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	33	51,18,56	39,39
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	18	3	—
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	29,53,17	—	—
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15,36,00	6	9,99
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	10	—	39,99

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 பிப்ரவரி 20

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	22,02,34	–	–
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	61,09,01	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	25	4	–
14	எரிசக்தித் துறை	1	1,295,63,97	2
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	3,90,50	–	–
16	நிதித் துறை	1,61,04	–	4,44,21
17	கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	37,68,04	–	1
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	6,29,47	49	85,07

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	319,45,58	128,79,65	37,99
20	உயர் கல்வித் துறை	68	5,39,39	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	11,93,21	34,36	–
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	430,76,84	47,50,70	9,31,81
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	66,24,77	10,10,97	–
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	43,46,91	3,45,54	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	47,69,40	28,67,57	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	133,80,68	107,87,97	–
27	தொழில் துறை	8	1	4

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,81,24	–	–
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	7,13,71	6	–
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	7,88,76	6,56,41	–
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	27,82,20	50,00	–
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	46	12,61,63	8,99
33	சட்டத் துறை	4	32,49	–
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	20	9	1
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	3,25,54	3,46,43	10,00
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	14,22,32	3	–

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2016 பிப்ரவரி 20] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	6	–	–
38	பொதுத் துறை	89,33,96	–	1
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	8	8,50,16	8,99
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	22	1,48	–
41	வருவாய்த் துறை	37	–	18,44
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	25	2	–
43	பள்ளிக் கல்வித் துறை	958,03,09	375,07,61	9,99
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	14	1	–
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	193,63,52	31,43,80	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	32,75,51	–	48,39

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	9,22	–	–
48	போக்குவரத்துத் துறை	10,14,29	–	267,99,99
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	14,02,47	2,13,89	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	15	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	4,193,87,94	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	113,56,94	1,39,18	–
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	37	12	28,00,00
	பெருமொத்தம்	**7,687,64,57**	**2,137,50,55**	**321,58,70**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS